# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக்கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.SA 3308/விசாரணை/E/2024</u>**

திரு.V.R.கிருஷ்ணகுமார் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத்தகவல்அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பூர், சென்னை-39. .. பொது அதிகார அமைப்பு

******

**<u>இறுதி ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 05.01.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பெரம்பூர் வட்ட சார் ஆய்வாளர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.R.தயாளமூர்த்தி 20.02.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலரின் 22.01.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்திற்கு 28.03.2026 தேதியிட்டு அனுப்பியுள்ள கடிதத்தில், பொதுத் தகவல் அலுவலர் 22.01.2026 தேதியிட்ட கடிதத்தில் தொடர்பற்ற பதிலை அனுப்பி வைத்துள்ளதாகவும், ஆணையத்தின் உத்தரவுப்படி தகவல் வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. ஆகவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் இவ்வாணையத்தின் 05.01.2026 தேதியிட்ட உத்தரவின்படி, <u>மேல்முறையீட்டாளரின் 08.11.2023 தேதியிட்ட புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த தகவலை</u> மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையுடன் கூடிய நகலை இணைத்து அறிக்கையாக **22.05.2026 அன்று ஆணையத்தில் பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு பெரம்பூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு**

**அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.** தவறும்பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்றும் பெரம்பூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 10.04.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்குஎண்.SA 3308/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பூர், சென்னை-39.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பூர், சென்னை-39.

திரு.V.R.கிருஷ்ணகுமார்
88A-59 துளசிங்கம் தெரு,
பெரம்பூர், சென்னை-11.

Copy to: File

RJ/PS 10.4